பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

29 03 2024 **FRIDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 21 மாநிலங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

2. பெங்களூருவில் உணவு விடுதி ஒன்றில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக, ஒருவரை கைது செய்துள்ளதாக தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

3. உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **'Dmytro Kuleba'** இரண்டு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

4. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கோலாலம்பூரில் மலேசியா அமைச்சர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

5. மியாமி ஓபன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்திற்கு இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 21 மாநிலங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நிறைவடைந்து நேற்று மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்டன.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் ஆயிரத்து 85 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

39 மக்களவைத் தொகுதிகளில் மொத்தம் ஆயிரத்து 749 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

நேற்று நடைபெற்ற இந்த மனுக்கள் மீதான பரிசீலனையின்போது தகுதியற்ற 664 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

மனுக்களை விலக்கிக்கொள்ள நாளை கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

இந்நிலையில், மாநிலம் முழுவதும் அரசியல் கட்சித்தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

பொதுக்கூட்டங்களிலும், திறந்த வாகனத்தில் சென்றும் வாக்காளர்களை நேரடியாக சந்தித்தும் வேட்பாளர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

இதற்கிடையே, அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு தொலைக்காட்சி மற்றும் வானொலியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

தேசிய கட்சிகள் தூர்தர்ஷனில் 15 மணிநேரத்திற்கு குறையாமலும், மாநில கட்சிகள் 30 மணிநேரத்திற்கு குறையாமலும் பிரச்சாரம் செய்ய நேரம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று ஆணையம் அறிவித்துள்ளது.

இதேபோல் வானொலியிலும் அங்கீரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்ய நேரம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதுகுறித்த வழிகாட்டு நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

பெங்களூருவில் உணவு விடுதி ஒன்றில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக, ஒருவரை கைது செய்துள்ளதாக தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

குண்டுவெடிப்புக்கான சதித்திட்டத்தில், இந்த நபருக்கு முக்கிய பங்கு இருப்பதாக தேசிய புலனாய்வு முகமை கருதுகிறது.

கர்நாடகா, தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அந்த புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தமக்கு இரண்டு பேர் உதவி செய்ததாக கூறியுள்ளதாகவும் அவர்கள் குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்த முகமை கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், பங்கேற்ற கல்லூரி மாணவிகள், மக்களவைத் தேர்தலில் ஆர்வமுடன் வாக்களிக்க காத்திருப்பதாக கூறினர்.

*(சவுண்ட் பைட் - மாணவிகள் - 35 செகண்ட்ஸ்)*

திருப்பத்தூரில் இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு பயிற்சி பெறும் மகளிர் குழுவினருக்கு அளிக்கப்பட்டது.

இவர்கள் வாக்காளர்களை சந்தித்து தேர்தல் விழிப்புணர்வு பணியில் ஈடுபட உள்ளதாக என்று எமது செய்தியாளர் தெரிவித்தார்.

*(சவுணட் பைட் - அனுராதா – 40 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

கோவை மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தமது வேட்புமனு குறித்து எதிர்க்கட்சிகள் தவறான பிரச்சாரம் செய்வதாக கூறினார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், குற்ற வழக்குகளை மறைத்து மற்றும் உண்மைக்கு மாறான தகவல்கள் வேட்புமனுவில் இடம்பெற்றிருந்தால் மட்டுமே அந்த மனுவை நிராகரிக்க முடியும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளதை சுட்டிக்காட்டினார்.

வேட்புமனு தாக்கலின்போது வேட்பாளர்கள் தெரிவிக்க வேண்டிய அனைத்து தகவல்கள் குறித்தும் தேர்தல் ஆணையம் தெளிவாக வழிகாட்டியுள்ளதாகவும் திரு அண்ணாமலை கூறினார்.

<<<<<<<>>>>>>

உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **'Dmytro Kuleba'** இரண்டு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அழைப்பின்பேரில் இந்தியா வந்துள்ள அவர், புதுதில்லியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சர், தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர், உட்பட பல்வேறு தலைவர்களை அவர் சந்தித்து பேசவுள்ளார்.

சர்வதேச மற்றும் ஆசிய அளவில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் இந்தியா – உக்ரைன் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு, உடன்படிக்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இந்திய தலைவர்களுடன் உக்ரைன் அமைச்சர் விரிவாக விவாதிக்க உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஏழு பேரை அந்நாட்டு நீதிமன்றம் விடுவித்துள்ளது.

ராமேஸ்வரத்திலிருந்து கடந்த 21-ஆம்தேதி மீன்பிடிக்க சென்ற இந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் சென்ற இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டது.

இலங்கையின் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஏழு மீனவர்களையும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர்கள் இந்திய துணைத்தூரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விரைவில் அவர்கள் தாயகம் திரும்புவார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

**JEE** இரண்டாம் கட்ட மெயின் தேர்வுகளை எழுதும் விண்ணப்பதார்களுக்கான தேர்வு மைய நகரங்களை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் 4-ம் தேதி முதல் 12-ம் தேதிவரை வெளிநாடுகளில் 22 நகரங்கள் உட்பட 319 நகரங்களில் இந்த தேர்வு நடைபெறவுள்ளது.

தினமும் காலை மாலை இரண்டு வேளையும் இந்த தேர்வு நடைபெறவுள்ள நிலையில் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பங்கேற்கும் தேர்வு கூட நகரங்களை அறிந்துகொள்ள முன்கூட்டியே இந்த அறிவிப்பை அந்த முகமை வெளியிட்டு உள்ளது.

<<<<<<<>>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கோலாலம்பூரில் மலேசியா அமைச்சர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

அந்நாட்டின் டிஜிட்டல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு கோபிந்த் சிங் தேவ்-வை சந்தித்து, டிஜிட்டல் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, அத்துறையில் உள்ள வர்த்தக வாய்ப்புகள், மலேசியாவில் மேற்கொள்ளப்படும் சிறந்த நடைமுறைகள் குறித்து விவாதித்தாக சமூக வலைதளத்தில் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பின்னர் ஜெய்சங்கர், இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசினார்.

மலேசியா இந்தியா காங்கிரஸ் அமைப்பின் தலைவர் விக்ஷேன்வரன், அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.

இந்தியா – மலேசியா இடையிலான உறவுகள் வலுவடைந்து வருவதற்கு இந்திய அரசு எடுத்துள்ள முயற்சிகளை அவர் பாராட்டினார்.

**<<<<<<<>>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

மியாமி ஓபன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்திற்கு இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதியில், இந்த இணை, 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ஸ்பெயினின் மார்ஷல் கிரானோலர்ஸ் - அர்ஜென்டினாவின் **Horacia Zeballos** இணையை வென்றது.

நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில், இந்தியா – ஆஸ்திரேலியா இணை, அமெரிக்காவின் **Austin Karajicek –** குரேஷியாவின் இவான் டோடிக் இணையை எதிர்கொள்கிறது.

--------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், நேற்று ஜெய்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி 12 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

முதலில் விளையாடிய ராஜஸ்தான் அணி நிர்ணயிகக்ப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 185 ரன் எடுத்தது.

186 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தில்லி அணி 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 173 ரன் மட்டுமே எடுத்தது.

பெங்களூருவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>>